1970 மார்ச் 3]

திரு. சு. துரைசாமி: தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் வெளியிடத்திலிருந்து வரும் பால் சப்ளை நின்றுவிட்டது என்று சொன்னார்கள். திருப்பூரிலிருந்து ஒரு ஆயிரம் லிட்டர் பால் கொடுத்துவந்ததை, அதிகாரிகள் வேண்டாம் என்று சொல்லிவிட்டதால்தான் நிறுத்தியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலையில் அமைச்சரவர்கள் பால் வாங்க ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: கோடை காலங்களில் எவ்வளவு பால் கொடுக்கிறார்களோ, அதற்கு மேல் ஒன்றரைப் பங்கு குளிர் காலங்களில் வாங்கத்தயார். கோடை காலங்களில் பால் குறைவாக இருப்பதால் அப்பொழுது கொடுக்காமல், குளிர் காலங்களில் பால் அதிகம் கறக்கும்போதுமட்டும் கொடுப்பது என்றால், அப்படி எல்லாப் பாலையும் மாதவரத்தில் வாங்கினால் நஷ்டம் ஏற்படுகிறது. ஆகவே, யார் கோடை காலங்களில் 100 லிட்டர் கொடுப்பார்களோ அவர்களிடமிருந்து குளிர் காலங்களில் 150 லிட்டர் பால் எடுப்போம் என்று உத்தரவு போட்டிருக்கிறார்கள். எந்தக் கூட்டுறவு சங்கத்திலிருந்தும் பால் வேண்டாம் என்று சொல்வதில்லை.

திரு. கே. விநாயகம்: சார், அரசாங்கத்தின் நோக்கம், பொது மக்கள் நல்ல பாலைக் குடிக்கவேண்டும் என்பதுதான். நல்ல பால் வேண்டும் என்றுதான் மாதவரம் பண்ணை பாலை வாங்குகிறோம் இப்பொழுது மில்க் பவுடரை கலந்து, டோனிங் செய்து மக்களுக்குத் தருவதாகச் சொல்கிறார்கள். அப்படி மில்க் பவுடர் கலந்தால், அதன் தரம் குறையாதா? அது ஆரோக்கியத்திற்கு நல்லதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, கறந்த பாலில்தான் உலகத் திட்டத்தின்கீழ் பால் பவுடரை சிங்கிள் டோன்ட், டபிள் டோன்ட் என்று தரம் உயர்த்தப்பட்டு பால் கொடுக்கப்படுகிறது. ஆரோக்கியத்திற்கு கேடு எதுவும் இல்லை. ஆறு சதவிகித சத்து உணவை மூன்று சதவிகிதமாகக் குறைக்கிறோம். மற்ற இடங்களில் நடப்பதைத்தான் நாமும் செய்கிறோம். தனியாக எதுவும் இல்லை.

தவளைகள் ஏற்றுமதி

* **182 வினா—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தவளைகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இல்லை.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, நம் அண்டை மாநிலமாகிய கேரளத்தில், தமிழகத்தில் தஞ்சை, திருச்சி பகுதிகளில் உள்ள தவளைகளை, நோான எப் சி. ஐ. மூலமாக விலைக்கு

வாங்கி, வெளிநாடுகளுக்கு அனுப்பி, அன்னியச் செலாவணியைப் பெறுகிறார்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அது போன்ற நடவடிக்கைகளை நம்முடைய தமிழக அரசும் மேற் கொள்ள முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அன்னியச் செலாவணி எந்த மாநிலத்திற்கும் தனியாகத் தருவதில்லை. நம் மாநிலத்திலிருந்து யாராவது அப்படிச் செய்ய முன்வந்தால், அரசு உதவி கொடுக்க முடியும்.

திரு. மா. இராசாங்கம்: தலைவர் அவர்களே, இந்தத் தவளைகளை இப்பொழுது யாரும் அனுப்பவில்லை என்றாலும், மேற்றுத் தவளை களையாவது அனுப்ப சர்க்கார் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அந்தத் தவளைகளையும் அனுப்ப யாராவது முன் வந்தால், அரசாங்கம் உதவியளிக்கும்.

திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன்: தலைவர் அவர்களே, தவளைகளை ஏற்றுமதி செய்வது போல், இறுக்கையும் கோளக்காரர்கள் எடுக் கிறார்கள். அதையும் நாமே ஏற்றுமதி செய்தால் என்ன என்பதை அரசாங்கம் பரிசிலிக்குமா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கேள்வி தவளை பற்றியது.

வாலாஜாபேட்டை பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்

*183 வின—திரு. எம். அப்துல் கபூர் சாகிப்: மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாலாஜாபேட்டையில் உள்ள கூட்டுறவு பட்டு நெசவுத் தொழிற்சங்கத்திற்கு இதுவரை அரசாங்கம் மூலதனமாக எவ்வளவு தொகை கொடுத்துள்ளது?

(இ) இச்சங்கம் நஷ்டத்தில் இயங்கிவருவது அரசுக்குத் தெரியுமா?

(உ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) வாலாஜாப்பேட்டை பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு அரசு 1957-58-ல் ரூ. 8,750/- பங்கு மூலதனக் கடனாகவும், 1959-60-ல் ரூ. 4,375/- மற்றொரு பங்கு மூலதனக் கடனாகவும் வழங்கியது.

(இ) ஆம்.

(உ) சங்கத்தின் பணிகளை மேம்படுத்துவதற்கும், சங்கம் செவ்விய முறையில் செயல்படுவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப் பட்டன. ஆனால், எடுக்கப்பட்ட அனைத்து முயற்சிகளும் அச்சங்கத்திற்குப் புத்துயிரூட்ட இயலவில்லை. மாவட்டக்